**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

பாதாள சாக்கடைத் திட்டம்- திருவொற்றியூர் நகராட்சி- ரூ.28.55 கோடி செலவில் 30 சிற்றொகுதிகளில் (றயசனள) உள்ள சாக்கடை வசதியினை விரிவாக்கவும் 18 சிற்றொகுதிகளில் புதிதாக ஏற்படுத்தவும் நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ஜ்நநி-3(1)னூ துறை**

அரசாணை (பத்தாண்டு) எண்:48 நாள்:6-02-2004

பார்வை :

1. நகராட்சி ஆணையர், திருவொற்றியூர் நகராட்சி கடித எண் 11490/96/இ

2 நாள் 17-02-2003 மற்றும் 28-02-20032. நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அலுவலர், தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியம் கடித எண் P2/UG/Thiruvottiyur /Projects/2 Dated:14-7-2003 னுயவநன:14-7-2003

3. நகராட்சி ஆணையர், திருவொற்றியூர் நகராட்சி கடித எண் 11490/96/இ2 நாள் 22-07-2003

4. நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண் 40901/2003/குவ 3 நாள் 06-08-2003 மற்றும் 3-10-2003

5. நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அலுவலர், தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியம் கடித எண் P2/UG/Thiruvottiyur /Projects/2 Dated:19-12-2003

ஆணை:-

திருவொற்றியூர் நகரில் 30 சிற்றொகுதிகளில் (றயசனள) ஏற்கெனவே உள்ள சாக்கடை வசதியினை விரிவாக்கவும் புதிதாக 18 சிற்றொகுதிகளில் சாக்கடை வசதியினை ஏற்படுத்தவும் ஆலோசக நிறுவனமான திருவாளர்கள் கன்ஸல்டண்ட் எஞ்சினீயரிங் சர்வீஸஸ் நிறுவனம் ஆய்வுப்பணி மேற்கொண்டு அறிக்கை அளித்துள்ளது. ரூ.28.55 கோடி செலவில் இத்திட்டத்தினை அரசிடமிருந்து மான்யமாகவோ அல்லது டுபிட்கோ நிறுவனத்தின் மெகாசிட்டி திட்டத்தின் கீழ் கடனாகவோ பெற்று நிறைவேற்ற

திருவொற்றியூர் நகராட்சி மன்றம் தனது 11-06-2003 நாளிட்ட 211-எண்ணிட்ட தீர்மானத்தில் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

2. தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியம் அரசுக்கு அளித்துள்ள அறிக்கையில் இத்திட்டத்திற்கான நிதியை கீழ்கண்டவாறு திரட்டலாம் என தெரிவித்துள்ளது:-

| | பாய் லட்சத்தில் |
|---|---|
| பயளாளிகளிடமிருந்து முன்வைப்புத் தொகை | **95.00** |
| தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியத்திடமிருந்து (TNUDF) கடன் | **81.34** |
| தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியத்திடமிருந்து (TNUDF) மான்யம் (Grant Fund I) | **00.00** |
| டுபிட்கோ நிறுவனத்தின் மெகாசிட்டி திட்டத்தின் கீழ் கடன் | **81.34** |
| **த**தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியத்திடமிருந்து(TNUDF) மான்யம் (Grant Fund II) | **97.78** |
| மொத்தம் | **855.46** |

3. மேலே பத்தி-1ல் குறிப்பிடப்பட்ட நகராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் திருவொற்றியூர் நகராட்சி ஆணையர் அனுப்பியுள்ள செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார். தனது பரிந்துரையில், திருவொற்றியூர் நகராட்சி மன்றம் வீட்டிணைப்புக்கு ரூ.5000/-ம் மற்ற இணைப்புகளுக்கு ரூ.10,000/-ம் முன்வைப்புத் தொகையாக வசூலிக்கவும், மாதக் கட்டணங்களை நிர்ணயித்தும் தீர்மானம் நிறைவேற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் கழிவுநீர் சுத்திந்துரையில், திருவொற்றியூர் நகராட்சி மன்றம் வீட்டிணைப்புக்கு ரூ.5000/-ம் மற்ற இணைப்புகளுக்கு ரூ.10,000/-ம் முன்வைப்புத் தொகையாக வசூலிக்கவும், மாதக் கட்டணங்களை நிர்ணயித்தும் தீர்மானம் நிறைவேற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டத் தேவைப்படும் தொகையான ரூ.5.00 கோடி நீங்கலாக மொத்தத் திட்டச் செலவு ரூ.23.55 கோடியில் திட்டத்தினை நடைமுறைபடுத்த நிர்வாக அனுமதி வழங்கலாம் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

4. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை ஆய்வு செய்ததில் கீழ்கண்ட நிலவரம் தெரியவருகிறது:-

திருவாளர்கள் கன்ஸல்டண்ட் எஞ்சினீயரிங் சர்வீஸஸ் நிறுவனம் சமர்ப்பித்துள்ள அறிக்கையின்படி மேற்படி திட்டத்தின் மொத்தச் செலவு ரூ.26.70 கோடி. இத்தொகையில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதற்கான செலவு ரூ.4.04 கோடியும் அடங்கும். மொத்தத் திட்டச் செலவில் கட்டுமான காலத்திற்கான வட்டித் தொகை மற்றும் 7 சதவிகித விலையேற்றத் தொகை ஆகியவை அடங்கா. விலையேற்றத் தொகையான ரூ.1.85 கோடியும் சேர்த்து மொத்தத் திட்டச் செலவு ரூ.28.55 கோடியாகும். இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளிடமிருந்து வசூலிக்கப்படவேண்டிய தொகை மொத்தம் ரூ.7.95 கோடி. இத்தொகையை திரட்ட பயனாளிகளிடம் வசூலிக்கவேண்டிய வைப்புத் தொகைக்கும் மாதக்கட்டணங்களுக்கும் நகராட்சி மன்றம் தக்க தீர்மானங்கள் நிறைவேற்றவில்லை. இத்திட்டத்திற்கு அரசு மான்யம் வழங்க இயலாது.

5. மேற்கண்ட சூழ்நிலையில், இத்திட்டத்தின்கீழ் வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணியினை மூன்றாவது சென்னை திட்டத்தின்கீழ் மேற்கொள்ளலாம் எனவும் அவ்வாறு மேற்கொள்ளும் பொழுது சென்னை பெருநகர குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் திருவொற்றியூர் நகராட்சி சார்பில் கழிவுநீரை வெளியேற்றலாம் எனவும் கருதப்படுகிறது. மேலும், இப்பணிக்குத் தேவைப்படும் நிதியினை மூன்றாவது சென்னை திட்டத்தின் கீழ் சரிக்கட்டலாம் எனவும் திட்டபணியில் காலதாமதம் ஏற்பட்டால் திருவொற்றியூர் நகராட்சியும் சென்னை பெருநகர குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியமும் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியம் அல்லது டுபிட்கோ நிறுவனம் போன்ற நிறுவனங்களிடம் நிதியுதவி பெற நடவடிக்கை எடுக்கலாம் எனவும் கருதப்படுகிறது. எனினும் தற்போதைக்கு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணி திருவொற்றியூர் பாதாள சாக்கடைத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே எடுத்துக் கொள்ள வேண்டும் என அரசு கருதுகிறது.

4. மேலே பத்தி-4 மற்றும் 5- ல் குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில் கீழ்கண்ட வரையறைகளுக்கு உட்பட்டு திருவொற்றியூர் பாதாள சாக்கடைத்திட்டத்திற்கு அரசு நிர்வாக அனுமதி வழங்குகிறது:-

(1) மொத்தச் செலவு ரூ.2855.46 (ரூபாய் இருபத்தெட்டு கோடியே ஐம்பத்தைந்து லட்சத்து நாற்பத்து ஆறாயிரம் மட்டும்) கோடியில் திட்டத்தினை செயல்படுத்த திருவொற்றியூர் நகராட்சிக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

(2) இத்திட்டத்தினை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும்கழிவு நீரகற்று வாரியம் வைப்புப் பணியாக மேற்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

(3) இத்திட்டத்திற்கு அரசு மான்யம் வழங்கப்பட மாட்டாது.

(4) பயனாளிகளிடமிருந்து வசூலிக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள வைப்புத் தொகை மற்றும் மாதக் கட்டணங்களுக்கு திருவொற்றியூர் நகராட்சி மன்றம் தக்க ஒப்புதல் தீர்மானம் நிறைவேற்றிய பிறகே தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் மற்றும் டுபிட்கோ நிறுவனத்திடம் கடன் / மான்யத்துக்கு நகராட்சி விண்ணப்பிக்கவேண்டும்.

(5) இத்திட்டத்தின்கீழ் வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணி மூன்றாவது சென்னை திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும். 3-வது சென்னை திட்டத்தில் காலதாமதம் ஏற்பட்டால் திருவொற்றியூர் நகராட்சியும் சென்னை பெருநகர குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியமும் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியம் அல்லது டுபிட்கோ நிறுவனம் போன்ற நிறுவனங்களிடம் நிதியுதவி பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5.இவ்வாணை நிதித் துறையில் 30-01-2004 நாளிட்ட அ.சா.எண்.6277/நநிகுவ/04-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எல்.என்.விஜயராகவன்,
அரசு செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5
நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அலுவலர்,
தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதியம் (TNUDF).
112, வைரம் வளாகம், முதல் மாடி,
தியாகராயா சாலை, சென்னை-600 017
நகராட்சி ஆணையர், திருவொற்றியூர் நகராட்சி, சென்னை-600 019
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், TUFIDCO,
84, ட்டி.ட்டி.கே.சாலை, 2-வது மாடி, ஆழ்வார்பேட்டை, சென்னை-600 018

நகல்
மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9
நிதி(நநிகுவ)துறை, சென்னை-600009
இருப்புக் கோப்பு/உதிரி

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்